**இனிமையான குழந்தைகளே! சத்சங்கம் என்பது ஒன்றே ஒன்று தான், அதன் மூலம் உங்களுக்கு சத்கதி ஏற்படுகின்றது. ஆத்மா தூய்மையாக ஆகின்றது, மற்றவை அனைத்துமே கெட்ட நட்பு. ஆதலால் நல்ல நட்பு கரை சேர்க்கும், தீய நட்பு மூழ்க வைக்கும் என்று கூறப்படுகின்றது.**

கேள்வி: பாபாவின் எந்த ஒரு காரியத்தினை எந்த தர்ம ஸ்தாபகர்களும் செய்ய முடியாது?

பதில்: பாபாவின் காரியம் அனைவரையும் தூய்மையற்ற நிலையிலிருந்து தூய்மையாக்கி வீட்டிற்கு திரும்ப அழைத்துச் செல்வது. அனைவரையும் உடலிலிருந்து முக்தி அளிக்கவே பாபா வருகின்றார், அதாவது மரணத்தைக் கொடுக்கின்றார். இந்த காரியத்தினை எந்த ஒரு தர்ம ஸ்தாபகர்களும் செய்ய முடியாது. அவர்கள் கீழே இறங்கிய பின்னர் அந்த தர்மத்தினைச் சேர்ந்த தூய்மையான ஆத்மாக்கள் மேலிருந்து கீழே இறங்குகின்றார்கள். அவரவர்கள் பாகத்தை நடித்து தூய்மையாக இருந்து தூய்மை இல்லாமல் ஆகிறார்கள்.

பாடல்: பிரியதரிசினிகளே விழித்தெழுங்கள்,.....

ஓம்சாந்தி! குழந்தைகள் பாட்டைக் கேட்டீர்கள். யார் கூறினார்? பிரியதரிசன். அனைத்து பக்தர்களும் பிரியதரிசினிகள். ஒரே ஒருவர் தான் பகவான் அவரைத் தான் பக்தர்கள் நினைவு செய்கின்றார்கள். அவரைத் தான் பிரியதரிசன் என்று கூறப்படுகின்றது. பக்தர்கள் என்றாலே ஆண் அல்லது பெண் இரு பாலாருமே அதில் அடங்கியுள்ளனர். அனைவருமே சீதைகள். ஒரே ஒருவர் இராமர். அநேக பக்தர்கள், ஒரே ஒருவர் பகவான். அந்த பகவானைத் தான் பரமபிதா பரமாத்மா என்று கூறப்படுகின்றது. லௌகீக் தந்தையை பரமாத்மா என்று கூறுவதில்லை. அவர் லௌகீக் உடலைத் தரக்கூடிய தந்தை. பரமபிதா என்பவர் பரந்தாமத்தில் வசிப்பவர். அனைத்து ஆத்மாவிற்கும் தந்தையாக இருக்கின்றார். ஒவ்வொரு மனிதனுக்கும் இரண்டு தந்தை உள்ளார்கள். ஒன்று லௌகீக் தந்தை, மற்றொருவர் பரலௌகீக் தந்தை. பல பிறவிகளாக லௌகீக் தந்தையிடமிருந்து ஆஸ்தியினை அடைந்தோம். ஒவ்வொரு பிறவியிலும் வேறு, வேறு தந்தை. நீங்கள் சிந்தனை செய்துப் பாருங்கள். எத்தனை பிறவிகள் எடுத்திருப்போம். எத்தனை தந்தை கிடைத்திருப்பார்கள். (84) 84 பிறவியில் அவசியம் 84 தந்தை, 84 தாய் கிடைப்பார்கள். ஒவ்வொரு பிறவியிலும் ஒவ்வொரு தாய் தந்தை இருப்பார்கள். பரமபிதா பரமாத்மா மற்றொரு தந்தை. ஆனால் ஒருபோதும் சத்தியயுகம், திரேதாயுகத்தில் ஓ, இறை தந்தையே! என்று நினைவு செய்ய மாட்டார்கள். ஓ, பரமபிதா பரமாத்மா இரக்கம் காட்டுங்கள் என்று கூறமாட்டார்கள். ஆதலால் சத்யுகம், திரேதாயுகத்தில் ஒரே ஒரு தந்தை மட்டுமே இருப்பார். பிறகு துவாபர், கலியுகம், இதற்கு பக்தி மார்க்கம் எனப்படுகிறது. பக்தி மார்க்கத்தில் இரண்டு தந்தை இருப்பார்கள். ஆண், பெண் அனை வருக்குமே இரண்டு தந்தையர். பரலௌகீக தந்தையை நினைவு செய்கின்றார்கள். ஏனென்றால் துக்க மான உலகம். துக்கமான உலகத்தில் இரண்டு தந்தை, சுகமான உலகத்தில் ஒரு தந்தை. இங்கு ஒன்று லௌகீக் தந்தை. அனைவருடைய துக்கத்தினை நீக்கக்கூடிய மற்றொரு தந்தை. இந்த துக்கமான உலகத்திலிருந்து விடுதலை செய்யுங்கள், இரக்கம் காட்டுங்கள் என்று அவரை நினைவு செய்கின்றார்கள். பாதி கல்பம் துக்கமான உலகம், பாதி

கல்பம் சுகமான உலகம். சத்தியயுகம் புதிய யுகம், கலியுகம் பழைய யுகம். இப்போது நாம் சத்தியயுகத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறோம். கலியுகம் என்ற பழைய உலகம் அழிந்து விடும். கலியுகத்திற்கு பின்னர் சத்தியுகம் வந்தே தீரும். கலியுகத்தின் முடிவு, சத்தியயுகத்தின் ஆரம்பம். கல்பத்தின் சங்கமம் என்று கூறப்படுகின்றது. இது கல்யாணகாரியுகம். ஏனென்றால் தூய்மையின்மையிலிருந்து தூய்மையாக ஆகியே தீரவேண்டும். கலியுகத்தில் தூய்மையில்லாத மனிதர்கள். சத்தியயுகத்தில் தூய்மையான தேவதைகள். பாபா புரிய வைக்கின்றார். இது அசுர இராவண சம்பிரதாயம். ஒவ்வொருவருக்குள்ளும் ஐந்து விகாரங்கள் பிரேவசேமாகி உள்ளது. அதனை இராவணன் சர்வவியாபி என்று கூறப்படுகின்றது. இறைவன் சர்வ வியாபி அல்ல. ஐந்து விகாரங்கள் பிரவேசமாகி உள்ளதால், இதனை பதீத்தமான உலகம் என்று கூறப்படுகின்றது. சத்தியுகம், திரேதா தூய்மையான உலகம், சிவாலயம் என்று கூறப்படுகின்றது. கலியுகம் விகாரம் நிறைந்த உலகம் (வைஸ்யாலையம்) சிவபரமபிதா பரமாத்மா வந்து புதிய உலகத்தினை ஸ்தாபனை செய்கின்றார். பாபா புரிய வைக்கின்றார், இப்போது விழித்தெழுங்கள். புதியயுகம், சுகதாமத்தின் நேரம் வந்து விட்டது. லட்சுமி, நாராயணர் இராஜ்யம் வருகின்றது. இது தான் இராஜ யோகம். இது பொதுவான சத்சங்கம் அல்ல. ஒன்று சத்தியமான நட்பு, மற்றொன்று பொய்யான நட்பு, தீய நட்பு. சத்தியமான நட்பு. சத்தியமான நட்பு கரை சேர்க்கும், தீய நட்பு மூழ்க வைக்கும். ஒரே பாபா தான் சத்தியமானவர். அவரைத் தான் பதீத்பாவனரே வாருங்கள் என்று அழைக்கின்றார்கள். அவர் வந்து தூய்மையானவர்களாக ஆக்குகின்றார், பாதி கல்பத்திற்கு. பின்னர் மாயை இராவணன் பாதி கல்பத்திற்கு தூய்மையற்றவர்களாக ஆக்குகின்றார். பாபா தூய்மை யில்லாதவர்களாக ஆக்குவ தில்லை. இப்போது இராவண இராஜ்யம். எதுவரை சத்தியமான பாபா வர வில்லையோ, அதுவரை சத்சங்கம் அல்ல. அனைத்துமே பொய்யான நட்பு, தீய நட்பு. நீங்கள் அனைவருமே சீதைகள், நீங்கள் பக்தி செய்கின்றீர்கள். பக்தியின் பலனை பகவான் வந்து தருகின்றார் என்று எண்ணு கின்றார்கள். அவசியம் பக்தியின் காலம் முடிவடையும் போது வருகின்றார். பாதி கல்பம் ஞானத்தின் பிராப்தி, பாதி கல்பம் பக்தியின் பிராப்தி. இப்போது நீங்கள் பகவானின் ஸ்ரீமத்படி முயற்சி செய்து கொண்டு இருக்கின்றீர்கள். ஒருவர் தான் பகவான். அவர் நிராகார் பரமபிதா பரமாத்மா. ஆத்மாக்களின் தந்தை. அவர் வருவதே சங்கமயுகத்தில், துவாபரயுகம், கலியுகத்தினை பக்தி காண்டம் என்று கூறப்படுகின்றது. சத்தியுகம், திரேதாயுகத்தினை ஞானக்காண்டம் என்று சொல்லப்படுகின்றது. ஞானக்கடல் பரமபிதா பரமாத்மா விடம் தான் ஞானம் உள்ளது. சாஸ்திரங்களில் உள்ளதை ஞானம் என்று கூறமுடியாது. அதில் ஞானம் இருந்திருந்தால் சத்கதி அடைந்திருப்போம். பாரதம் வைரம் போன்று இருந்தது, தற்போது இல்லை. பின்னர் பாபா ஏற்படுத்துகின்றார். உங்களின் வாழ்க்கை மாறிக் கொண்டிருக்கிறது. தெய்வீக குணங்களை ஆத்மா தாரணை செய்கின்றது. மனிதர்கள் வக்கீல், இஞ்சீனியர், டாக்டர் ஆகின்றார்கள். மனிதர்களை தேவதையாக ஆக்குவது பரமபிதா பரமாத்மாவின் காரியம். ஞானக்கடலின் கடமையாகும். அவரைத்தான் சத்தியம் என்று கூறப்படுகின்றது. இவர் தான் சத்தியத்தினை கூறி சத்திய கண்டத்தை ஸ்தாபனை செய்கின்றார். அனைவரும் பொய்யைக் கூறக்கூடியவர்கள். பொய்யான கண்டத்தினை ஸ்தாபனை செய்கின்றார்கள். இராவணனின் வழிப்படி நடக்கின்றார்கள். நீங்கள் ஸ்ரீமத்படி சிரேஷ்டமாக ஆகின்றீர்கள். புதிய யுகத்தில், பாரதம், புதியதாக

இருந்தது. அவரை சர்வ சக்திவான் என்று கூறப்படுகின்றது. லட்சுமி-நாராயணன் இராஜ்யம் இருந்தது. அவர்களுக்கு யார் இராஜ்ய பாக்கியத்தினைக் கொடுத்தார்கள்? அவசியம் சொர்க்கத்தை ஸ்தாபனை செய்யக்கூடிய வராகத்தான் இருப்பார். தற்போது அவர்கள் ஆஸ்தியை இழந்து விட்டார்கள். 84 பிறவிகளை எடுத்து இப்போது சக்கரம் முடிவடையப்போகின்றது. அனைவரும் திரும்பிச் செல்ல வேண்டும். ஒரே ஒரு பாபா தான் விடுதலை செய்கின்றார். அவர் விடுதலை செய்து வாபஸ் அழைத்துச் செல்கின்றார். ஆதலால் காலனுக்கெல்லாம் பெரிய காலன் என்று சொல்லப்படுகின்றது. இப்போது பாபா கூறுகின்றார் உங்களுடைய 84 பிறவிகள் முடிவடைகின்றது. இப்போது திரும்பிச் செல்ல வேண்டும். இந்த காலச்சக்கரம் எவ்வாறு சுற்றுகின்றது என்று பாபா புரிய வைக்கின்றார், திரிகாலதரிசியாக ஆக்குகின்றார். மூன்று உலகத்தின், மூன்று காலத்தின் ஞானத்தினைத் தருகின்றார். அவர் பதீத் பாவனன், ஞானக்கடல், விதை ரூபமாக இருக்கின்றார். அவரிடமிருந்து சத்திய கண்டத்தின் ஆஸ்தியை பெறுகின்றீர்கள். இங்கு நீங்கள் வந்திருக்கின்றீர்கள் பரமபிதா பரமாத்மாவிடமிருந்து ஆஸ்தியை அடைவதற்கு. அவர் தான் சொர்க்கத் தினை ஸ்தாபனை செய்யக் கூடியவர். நாம் தான் சொர்க்கத்தின் எஜமானர்களாக ஆகின்றோம் என்பதை புரிந்து கொண்டீர்கள்.

சத்தியயுகத்தின் லட்சுமி-நாராயணன் முதலானவர்களுடையதை தேவதா தர்மம் என்று கூறப்படு கின்றது. அது சிரேஷ்டமான தர்மம். அவர்களின் தர்மமும் சிரேஷ்டம், கர்மமும் சிரேஷ்டம். அங்கு யாருமே தாழ்ந்தவர்கள் இருக்க மாட்டார்கள். துவாபர-கலியுகத்தில் சிரேஷ்டமானவர்கள் யாருமே யில்லை. பாபாவை மறந்த காரணத்தால் மோசமான நிலை ஏற்படுகின்றது. பின்னர் பாபா வந்து தூய்மை இழந்தவர்களை, தூய்மை படுத்துகின்றார். தர்ம ஸ்தாபகர்கள் யாருமே தூய்மை இல்லாத வர்களை தூய்மை ஆக்க வருவதில்லை. ஒரே ஒரு பாபா தான் பதீத்பாவனன். அவர் தான் சத்தியமான குருவாக இருக்கின்றார். அவர் வந்து தர்ம ஸ்தாபனை செய்கின்றார். மேலே இருந்து தூய்மையான ஆத்மாக்கள் வருகின்றார்கள். பின்னர் தூய்மை இல்லாமல் ஆகின்றார்கள். இச்சமயம் அனைவருமே தூய்மையில்லாமல் உள்ளார்கள். அனைவரையுமே தூய்மையாக ஆக்குவது பாபாவின் காரியம். அவர் தான் பதீத்பாவனன். அந்த சத்குருவை தான் குருநானக் கூட மகிமை செய்துள்ளார். பழைய உலகத்தின் அழிவுக்காக மகாபாரத யுத்தம் ஏற்படுகின்றது. யுத்த மைதானத்தில் ஞானம் கூறுகின்றார் என்பதல்ல. ஞானத்திற்கு ஏகாந்தம் அவசியம். 7 நாட்கள் பட்டியில் இருக்க வேண்டும். மற்றவைகள் பக்தியின் சாமகிரிகள் (சாதனங்கள்). பக்தியில் கூட மிகவும் தீவிரமானவர்கள் உள்ளார்கள். ருத்திர மாலையும் உள்ளது, பக்தி மாலையும் உள்ளது. அது பக்தி மாலை. இது ஞான மாலை. சிவபாபா மேலே உள்ளார், பின்னர் ஜோடியான மணிகள், அவர்களின் வம்சாவளி மாலையை மனிதர்கள் நினைக் கின்றார்கள். இராம், இராம் என்று கூறிக்கொண்டே இருக்கின்றார்கள். ஏனென்றால், துக்கமாக உள்ளார்கள். இராவண சம்பிரதாயத்தினர் இராமரை நினைவு செய்கின்றார்கள். நீங்கள் வந்து உங்களுடையவராக ஆக்குங்கள் என்று. இப்போது நீங்கள் ஈஸ்வரனுடைய மடியில் இருக்கின்றீர்கள். உண்மையில் அனைவரும் பரமபிதா பரமாத்மாவின் குழந்தைகள். மனித சிருஷ்டி பிரஜாபிதா பிரம்மாவின் குழந்தைகள். பிரஜாபிதா பிரம்மா மூலம் மனித சிருஷ்டி படைக்கப்படுகின்றது. ஆத்மா அழிவற்றது. ஆத்மாவிற்கு அழிவற்ற தந்தை

உள்ளார். இப்போது உங்களுக்கு இரண்டு தந்தை உள்ளனர். ஒருவர் அழியக்கூடியவர். மற்றொருவர் அழிவற்றவர். பிரம்மா கூட உடலை விட்டு விடுவார். சிவபாபாவிற்கு தனக்கென்று உடல் கிடையாது. பிறப்பு, இறப்பு இல்லை. நீங்கள் குழந்தை கள் தான் பிறப்பு இறப்பில் வருகின்றீர்கள். நீங்கள் ஆதி சனாதன தேவி தேவதைகள் தான் 84 பிறவிகள் எடுக்கின்றீர்கள். கணக்கு உள்ளது. குருநானக் வந்து 500 ஆண்டுகள் ஆகியுள்ளது. எப்படி 84 பிறவிகள் எடுக்க முடியும். இலட்சக்கணக்கான பிறப்புகள் என்ற பேச்சேயில்லை. இப்போது பாபா புரிய வைக்கின்றார். அனைவருடைய பிறப்பு முடிவடையப்போகின்றது. பின்னர் புதிய சத்தியயுகத்தில் விளையாட்டு ஆரம்பமாகும். சத்தியுகத்தில் கொஞ்சம்பேர் தான் இருப்பார்கள். இத்தனை பேர் எங்கே செல்வார்கள்? அவர்களுக்காக இந்த சுடுகாடான உலகம் தீயினால் எரிந்து போய்விடும். இயற்கை சீற்றங்கள், அணுகுண்டுகளால் அனைத்துமே அழிந்து போய்விடும். இதர ஆத்மாக்கள் முக்தி தாமத்திற்கு சென்று விடுவார்கள். இது இறுதியான சமயம். அனைவரும் வாபஸ் திரும்பி செல்ல வேண்டும். பாரதத்தை அழிவற்ற கண்டம் என்று கூறப்படுகின்றது. பாரதம் தான் பாபாவின் ஜென்மபூமி. சிவபாபா பாரதத்தில் தான் வருகின்றார். பதீத்பாவனன் பாபாவின் பிறப்பு பாரதத்தில். அனைத்து தர்மத்தினருக்கும் பாரதம் மிகப்பெரிய தீர்த்த ஸ்தலம். பாரதத்திற்கு மிகவும் மகிமை யுள்ளது. பாரதத்தின் பெருமையினை மறந்துவிட்டார்கள். இது கூட டிராமாவின் விளையாட்டு என்று பாபா புரிய வைக்கின்றார். நான் ஞானக்கடல் என்று பாபா கூறுகின்றார். லட்சுமி-நாராயணரை ஞானக்கடல் என்று சொல்ல முடியாது. அவர்களிடம் படைப்பவர் மற்றும் படைப்பின் ஆரம்பம், இடை மற்றும் இறுதியை பற்றிய ஞானமில்லை.

உங்களிடம் நிச்சயமாக அந்த ஞானம் உள்ளது. நீங்கள் மனிதர்களிலிருந்து தேவதையாக ஆகின்றீர்கள். நீங்கள் இங்கு வருவதே தூய்மையில்லாமலிருந்து தூய்மையான உலகத்திற்கு எஜமானராக ஆவதற்கு. பாபா ஆத்மாக்களிடம் பேசுகின்றார். நிராகாரமான தந்தை இவர் உடலை கடனாகப் பெறுகின்றார், படிப்பு கற்றுக் கொடுக்கின்றார். உங்கள் ஆத்மாவும் உடல் என்ற அவயம் மூலமாக கேட்கின்றது. பாபா புரிய வைக்கின்றார்: ஆத்மா என்பது நட்சத்திரம் போல் உள்ளது. இரண்டு புருவங்களுக்கு இடையில் வசிக்கின்றது. தந்தை என்பவர் பரமாத்மா. பரம தந்தை வந்து நம்மையும் உயர்வாக ஆக்கி கூடவே அழைத்துச் செல்கின்றார். அனைத்து ஆத்மாவிற்கும் வழிகாட்டியாக உள்ளார். அவரை துக்கத்தினை நீக்கி, சுகத்தினைக் கொடுப்பவர் என்று கூறப்படுகின்றது. உங்களை துக்கத்திலிருந்து விடுதலை செய்து அழைத்துச் செல்கின்றார். சத்தியயுகத்தில் துக்கம் என்பதேயிருக்காது. புதிய யுகத்தின் ஞானம் கூட புதுமையாக உள்ளது. இந்த விஷயங்களை மனிதர்கள் கேட்டதேயில்லை. நல்ல மனிதர்கள், கெட்ட மனிதர்கள் உள்ளார்கள். அனைவரும் தூய்மையற்றவர்களாக உள்ளார்கள். தூய்மையாவதற்கு கங்கையில் நீராட செல்கின்றார்கள். கங்கைக்கு பதீத் பாவனி என்று பெயர் வைத்துள்ளார்கள். ஆனால் பதீத் பாவனன் என்று பாபாவைத்தான் கூறமுடியும். தூய்மை இல்லாத உலகத்திற்கு பின்னர் தூய்மை யான உலகம் ஸ்தாபனை ஆகின்றது. சத்தியயுகத்தினை விகாரமற்ற உலகம் என்று கூறப்படு கின்றது. அதனை அமைதியான நிராகாரமான உலகம் என்று சொல்லப்படுகின்றது. இங்கு வந்து ஆத்மாக்கள் தனது பாகத்தினை நடிக்கின்றார்கள். 84 பிறவிகளின் பாகம்

உள்ளது. நீங்கள் அனைத்து பாத்திரங் களிலும் நடிக்கின்றீர்கள். இது ஏற்கனவே உருவாக்கப்பட்ட நாடகம். ஒவ்வொருவரின் பாகமும் அழிவற்றது. ஒருபோதும் அழியாதது. நீங்கள் 84 பிறவிகளை அனுபவம் செய்கின்றீர்கள். சக்கரத்திற்கு ஆரம்பமும் இல்லை, முடிவுமில்லை. இந்த நாடகம் எப்போது ஆரம்பமானது என்ற கேள்விக்கே இடமில்லை, ஆரம்பமுமில்லை, முடிவுமில்லை. சத்தியயுக ஆரம்பம் சத்தியமானது, இவை உண்மை யானது. இந்த சக்கரத்தினைப் புரிந்து கொண்டால் நீங்கள் சக்கரவர்த்தி மகாராஜா மாகாரணியாக ஆகின்றீர்கள். அதனை சர்வ சக்திவான் இராஜ்யம் என்று கூறப்படுகின்றது. சர்வ சக்திவான் பாபாவிட மிருந்து கிடைக்கின்றது. நீங்கள் எல்லையற்ற தந்தையிடமிருந்து 21 பிறவிகளுக்காக சதா சுகமான ஆஸ்தியை அடைகின்றீர்கள். பாபாவை சொர்க்கத்தினைப் படைப்பவர் என்று கூறப்படுகின்றது. சொர்க்கத்தின் ஆஸ்தியினைக் கொடுக்க பாபா கல்பத்தின் சங்கம யுகத்தில் வந்து சொர்க்கத்தின் ஆஸ்தியினைத் தருகின்றார். யார் முயற்சி செய்கின்றார்களோ அவர்கள் சூரிய வம்சத்தின் இராஜ்யத்தில் வருவார்கள். இது பொதுவான சத்சங்கம் அல்ல. இது இறைவனின் பல்கலைக்கழகம். பகவானுடைய மகாவாக்கியம் அல்லவா. பகவான் பாடம் கற்றுக் கொடுத்து மனிதர் களை தேவதையாக ஆக்குகின்றார். மனிதர்களை, தேவதைகளாக ஆக்குகின்றோம் என்று வேறு எந்த சத்சங்கத்திலும் கூறமாட்டார்கள்.

இப்போது குழந்தைகளாகிய நீங்கள் புதிய உலகத்தில் தேவி, தேவதா பதவியை அடைவதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கின்றீர்கள். இரண்டு தந்தை உள்ளார்கள் என்பதை புரிய வைக்க வேண்டும். ஒருவர் எல்லைக்கு அப்பாற்பட்ட தந்தை, மற்றொருவர் எல்லைக்குட்பட்டவர். நாம் எல்லைக்கு அப்பாற்பட்ட தந்தையிடமிருந்து ஆஸ்தியை அடைந்து கொண்டிருக்கின்றோம். உங்களுக்கு வழி கூறுகின்றோம்., ஆஸ்தியினைப் பெற்றுக் கொள்ளுங்கள். சிரேஷ்டத்திலும், சிரேஷ்டமான பரமபிதா பரமாத்மாவின் வழிப்படி நடப்பதின் மூலமாக சொர்க்கத்தின் எஜமானராக ஆக முடியும். ஒரு பாபா தான் சத்தியமானவர், அவர் வந்து படிப்பு கற்றுத் தருகின்றார். இவருடைய உடலில் வந்து கூறுகின்றார். பிரம்மா முகவம்சாவளிக்கு ஆஸ்தியினைத் தருகின்றார். பிரம்மா மூலமாக தாத்தாவின் ஆஸ்தி கிடைக்கின்றது. அனைத்து ஆத்மாவிற்கும் தாத்தாவின் ஆஸ்தி அடைய உரிமையுள்ளது. லௌகீக் சம்மந்தத்தில் ஆண்களுக்குத் தான் ஆஸ்தி கிடைக்கும். நீங்கள் ஆத்மாக்கள், அனைவருமே சகோதரர்கள். அனைவருக்கும் சிவபாபாவிடமிருந்து ஆஸ்தி கிடைக் கின்றது. உங்களுக்கு தாத்தாவிடமிருந்து ஆஸ்தி கிடைக்கின்றது.

உங்களை கோவிலில் உள்ள மூர்த்திக்கு தகுதியானவராக மாற்றுகின்றேன் என்று பாபா சொல்கிறார். மனிதர்களிடம் எவ்வளவு கோபம் உள்ளது. ஒருவர், மற்றவர்களை அழிக்கின்றார்கள். இது விகார உலகம் (வைஸ்யாலயம்). சிவாலயமாக இருந்தது. இப்போது மீண்டும் ஆக வேண்டும். பரமபிதா பரமாத்மா வந்து மீண்டும் சிவாலயமாக ஆக்குகின்றார். விகாரம் நிறைந்த உலகத்திலிருந்து விடுதலை செய்து அனைவருக்கும் வழிகாட்டியாக சிவாலயத்திற்கு அழைத்துச் செல்கின்றார். அனைவரும் தனது பழைய உடலிலிருந்து முக்தி அடைந்து என்னுடன் திரும்பச் செல்வீர்கள். நல்லது.

இனிமையிலும், இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும், தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை

வணக்கங்களும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கியமான சாரம்:

(1) தெய்வீக குணங்களை தாரணை செய்து தனது வாழ்க்கையை மாற்றிக் கொள்ள வேண்டும். சத்தியமான கண்டத்திற்கு செல்வதற்கு சத்தியமான பாபாவிடம் சத்தியமாக இருக்க வேண்டும்.

(2) ஒரு சத்தியமான பாபாவின் நட்பில் இருக்க வேண்டும். மனிதர்கள் தேவதையாக ஆக படிப்பை நன்றாகப் படித்து எல்லையற்ற ஆஸ்தியைப் பெற வேண்டும்.

வரதானம் : ஒவ்வொருவரின் சுபாவ சம்ஸ்காரத்தை தெரிந்துக் கொண்டு, மோதலுக்குப் பதிலாக பாதுகாப்பாக இருக்கக்கூடிய மாஸ்டர் ஞானம் நிறைந்தவர் ஆகுக

எந்த ஒரு விஷயத்தையும் சிறியதாகவோ பெரியதாகவோ ஆக்குவது - இது தன்னுடைய புத்தியின் மீது இருக்கினற்து. எப்பொழுது ஒருவர் மற்றொருவரின் சுபாவ சம்ஸ்காரங்களை தெரிந்து கொண்டால், ஞானம் நிறைந்தவர்கள் ஒருபோதும் யாருடைய சுபாவ சம்ஸ்காரத்தின் மீது மோதல் ஏற்படாது. எப்படி யாருக்காவது இங்கு குழி இருக்கிறது, மலை இருக்கின்றது என தெரிந்து கொண்டவர்கள் ஒருபோதும் மோத மாட்டார்கள். ஒதுங்கி செல்வார்கள். அதுபோல நீங்கள் கூட ஒதுங்கி செல்லுங்கள். அதாவது பாதுகாப்பாக இருங்கள். எந்த ஒரு வேலையில் இருந்தும் ஒதுங்கக் கூடாது, ஆனால் தன்னுடைய பாதுகாப்பின் சக்தியின் மூலம் மற்றவர்களையும் கூட பாதுகாக்க வேண்டும் இது தான் ஒதுங்கி இருப்பதாகும்.

சுலோகன்: பறக்கும் கலையை அனுபவம் செய்ய வேண்டுமென்றால் எப்போதும் பாக்கியம் மற்றும் பாக்கிதயத்தை அளிக்க கூடியவரின நினைவில் இருங்கள்.